

தனி பிரதி
ரூ.10/-



PORIYIYAL KADHIR

# பொறியியல் கதிர்

கதிர் 46 | பாரிப்பு 5 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஏப்ரல் 2015




நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**
CHEPAUK, CHENNAI - 600 005.

## 17.03.2015 அன்று தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர்சங்கம் மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் காட்சிகள்

### தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க பொதுச்செயலாளர் பொறியாளர் ஏ. அசோக்குமார் அவர்கள் ஊடகங்களுக்கு பேட்டி அளிக்கிறார்






**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 5 (2014 - 2015)

# தொடரும்
# நம் பயணம் .......



## அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

20.02.2006 அன்று தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி உயர்வு பெற்ற 21 நபர்களை பணி இறக்கம் செய்ய வேண்டும் என்று மாற்றுச்சங்கம் வழக்கு தொடுத்திருந்தது. அந்த வழக்கில் மூன்று மாதத்திற்குள் அரசு ஆணை எண். 1க்கு விதித்திருத்தம் வழங்கப்படவில்லையென்றால் மேற்கண்ட 21 உதவிப்பொறியாளர்களை பதவி இறக்கம் செய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதை எதிர்த்து மேல்முறையீடு செய்திருந்தோம். கடந்த 05.03.2015 அன்று நீதியரசர்கள் K. அக்னிஹோத்ரி, M. வேணுகோபால் அடங்கிய பெஞ்ச், நமக்கு சாதகமாக இடைக்கால தீர்ப்பு வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். ஏற்கனவே இருந்த நிலையே தொடர வேண்டும் (To Maintain Status quo) என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நமது சார்பாக வாதிட்ட மூத்த வழக்கறிஞர் திரு. K.V. சுப்ரமணியம், வழக்கறிஞர்கள் திருமதி. மலர்விழி உதயகுமார், திரு. P. ராஜேந்திரன், திரு. சுப்ரமணி ஆகியோர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இறுதி தீர்ப்பும் நமக்கு சாதகமாக வரும் என்று உறுதியாக நம்புவோம்.

மேலும் அரசாணை எண்.1. பொ.ப.து. நாள்.02.01.1990க்கு விதித்திருத்தம் வழங்க தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வரும் வேளையில் அதை தடுப்பதற்கு மாற்றுச்சங்கம் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. விதித்திருத்தம் வழங்குவதில் தேவையற்ற காலதாமதம் ஏற்பட்டால் கடுமையான போராட்டங்கள் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமால் வழக்கில் நமக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள கருத்தை (Observation) அவசர அவசரமாக அமுல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. 8 இளம் பொறியாளர்/உதவி பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வு அளிப்பதில் திருமால் வழக்கில் கூறப்பட்ட கருத்தை அமுல்படுத்த முயற்சிகள் நடைபெற்று வந்தது. கடந்த 09.03.15 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மரியாதைக்குரிய முதன்மைச்செயலாளர் பொதுப்பணித்துறை அவர்களையும் சந்தித்து இது தவறு என்பதை சுட்டிக் காட்டினோம். ஏற்கனவே ஸ்ரீராமச்சந்திரா வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை (Judgement) கருத்தில் கொள்ளாமல், திருமால் வழக்கில் கூறப்பட்டுள்ள கருத்தை எடுத்துக்கொள்வது தவறு என்றும், இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள கருத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு (Appeal) செய்துள்ளதால் இந்த வழக்கு முடிவுக்கு

வரவில்லை என்பதையும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிகளுக்கு புறம்பாக செயல்படக்கூடாது என்பதையும் எடுத்துக்கூறினோம். இதை கனிவோடு கேட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், முதன்மைச்செயலாளர் பொதுப்பணித்துறை அவர்களும் ஆவண செய்வதாக கூறியுள்ளார்கள்.

இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை, உதவிப்பொறியாளர்கள் பணிவரன்முறை , பட்டம் முடித்த இளநிலைப்பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் செய்யும் ஆணைகள் ஏப்ரல் மாதம் இரண்டாவது வாரத்தில் வழங்கப்பட்டுவிடும்.

அரசிடமிருந்து தெளிவுரைகள் கேட்டு தலைமை பொறியாளர் (பொது) அலுவலகத்திற்கு கோப்புகள் வந்தால் 6 மாதங்கள் 1 வருடம் என்று பதில் எழுதாமல் இழுத்தடிப்பது அல்லது பதிலே அனுப்பாமல் விட்டு விடும் மிகவும் மோசமான ஒரு நிலை தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் நிலவி வருகிறது. உதாரணம் பட்டயம் முடிந்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு, 500 புதிய தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை உருவாக்கும் கோப்பு, பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் மறு பணிஅமர்வு செய்யப்பட்டு மீண்டும் பணி அமர்வு செய்யப்பட்ட இளநிலைப் பொறியாளர்களுக்கு பணி இடைக்காலம் பிழை பொறுத்தல் கோப்பு (Break in Condonation) என்று அடுக்கிக் கொண்டே போகலாம் விதித்திருத்தம் (Rule Amendments) சம்பந்தமான கோப்புகளுக்கு அரசுக்கு பதிலே அனுப்பாத ஒரு நிலை நிலவி வருகிறது.

தலைமைப் பொறியாளர் (பொது) இணைத் தலைமைப்பொறியாளர் (பொது) ஆகியோரிடம் பலமுறை எடுத்துக் கூறியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது வருத்தத்துக்குரியது. விரைந்து நடவடிக்கை எடுப்பதாக கூறுகிறார்கள். ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. தானாக சாதாரணமாக நடக்க வேண்டிய காரியங்களுக்கு கூட போராட்டங்கள் நடத்த வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**D. முருகேசன்,** பொதுச் செயலாளர் செல்பேசி எண் 9444 999 588 / 988 444 98 97
**E.mail: d.murugavelsivan@gmail.com**

## 07.03.2015 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 07.03.2015 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம் பொறியியல் இல்லம் பொறியாளர் சி.பி. சண்முகம் அரங்கில் மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத் தலைவர், மாநிலத்துணைத் தலைவர் ஆகியோர் தங்களுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் பற்றி பேசினர். பொதுச்செயலாளர் தன்னுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். மேலும் சங்க வழக்குகள் சம்பந்தமாகவும் விரிவாக பேசினார்.

மையச்சங்க பொறுப்பாளர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தார்கள்.

### தீர்மானங்கள்:-

1. உதவி செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வில், திருமால் வழக்கில் கூறப்பட்டுள்ள கருத்தை (Observation) அமுல்படுத்துவதை தடுத்து நிறுத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

2. கோயம்புத்தூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு பொறியியல் சங்க இல்ல முதல் மாடி கட்டிடத்தை 09.05.2015 அன்று திறப்புவிழா செய்வது என்றும், அன்றே மையச் செயற்குழு கூட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

3. ஏற்கனவே தீர்மானித்தபடி நூற்றாண்டுவிழா ஆவணப்படத்தில் மாற்றங்கள் செய்யவேண்டிய, புதிதாக சேர்க்கப்படவேண்டிய புதிய காட்சிகள் படப்பிடிப்பு ஏற்கனவே முடிந்துவிட்டது. அதில் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் முறையில் படக்கலவை செய்து ஆவணப்படத்தையும், நூற்றாண்டுவிழா சங்க வாழ்த்துபாடலையும் 500 குறுந்தகடுகள் (CD) தயாரிப்பது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

4. 15.11.2014 மதுரையில் நடைபெற்ற மையப்பொது குழுவில் விவாதித்தபடியும், 31.01.2015 காஞ்சிபுரத்தில் நடைபெற்ற செயற்குழுவில் முடிவு செய்ததிற்கு இணங்க திரு.K.P. தியாகராஜன் அவர்களின் கலையாரம் பிரிண்டர்ஸ் 182, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை - 5க்கு பதிலாக திரு. J. விவேகானந்தன் "ஆலயம்" பிரிண்டர்ஸ் No. 45, சூரப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5 என்று மாற்றுவது என தீர்மானிக்கப்படுகிறது.

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
**(Civil Appellate Jurisdiction )**

**Thursday, the Fifth day of March Two Thousand Fifteen**
**PRESENT**

**THE HON'BLE MR. JUSTICE SATISH K. AGNIHOTRI**
**And**
**THE HON'BLE MR. JUSTICE M. VENUGOPAL**

**MP No. 1 of 2015**
**in WA No.82 of 2015**

1 P.SEKAR, (PETITIONERS)
ASSISTANT ENGINEER PWD,
BUILDINGS CONSTRUCTION SECTION 2,
BUILDINGS ( C & M) SUB DIVISION,
RAMANATHAPURAM

2 T.VENKATESAN
ASST. ENGINEER, PWD,
BUILDINGS SECTION,
CHENGAM, T.V. MALAI

3 T. ARIVUMANI
ASST. ENGINEER, PWD,
BUILDINGS CONSTRUCTION SECTION,
SIRKAZHI, MAYAVARAM (TK)

4 S.S. SHANTHI
ASSISTANT ENGINEER, PWD,
BUILDINGS CONSTRUCTION SECTION II,
BUILDINGS ( C&M ) SUB DIVISION,
KRISHNAGIRI

5 R. CHANDRASEKARAN
ASSISTANT ENGINEER, PWD,
BUILDINGS CONSTRUCTION
SECTION II, BUILDINGS (C&M ) SUB DIVISION,
RANIPET, VELLORE DISTRICT

6 T. THANGARATHINAM
ASSISTANT ENGINEER, PWD,
BUILDINGS ( C&M ) SECTION,
BUILDINGS ( C&M ) SUB DIVISION,
PALANI, DINDIGUL DIST

7 M. THANUMOORTHY
ASSISTANT ENGINEER, PWD,
ANTI SEA EROSION SECTION,
CHERUPALLUR, KANYAKUMARI DISTRICT

8 S. JEGANATHAN
ASSISTANT ENGINEER, PWD,
NAMBIYAR DIVISION,
VALLIYOOR, TIRUNELVELI DISTRICT

9 R. THIAGARAJAN
ASSISTANT ENGINEER, PWD,
GAUGING SECTION, G.A.
CANAL DIVISION, THANJAVUR

10 N. MURUGESAN
ASSISTANT ENGINEER, PWD/WRO,
MANAPARAI SECTION
(ARIYAR BASIN DN) MANAPARI,
TRICHY DISTRICT

11 A. SINGARAVADIVELU
ASSISTANT ENGINEER, PWD,
PLANNING & DESIGNS SUB DIVISION,
ERODE

12 P.S. SIVAKUMAR
ASSISTANT ENGINEER, PWD,
PROJECT PREPARATION CELL SUB DIVISION II,
THANJAVUR

13 T. CHELLAM
ASSISTANT ENGINEER, PWD,
MANIMUTHAR DAM SITE,
MANIMUTHAR, TIRUNELVELI

14 P. KARTHIKEYAN
ASSISTANT ENGINEER, PWD, BUILDINGS SECTION,
MYLADUTHURAI

15 C. BALAMURALITHARAN
ASSISTANT ENGINEER, PWD, WRO,
NAMBIYAR DIVISION,
VALLIYOOR, TIRUNELVELI DISTRICT

Vs

1 ASSOCIATION OF ENGINEERS ( RESPONDENTS )
TAMILNADU PUBLIC WORKS DEPARTMENT,
CHEPAUK, CHENNAI 5,
REP. BY ITS GENERAL SECRETARY, D. ARUMUGAM

2 THE STATE OF TAMILNADU
REP. BY ITS SECRETARY TO GOVERNMENT,
PUBLIC WORKS DEPARTMENT,
FORT ST GEORGE, CHENNAI - 9

3 THE ENGINEER IN CHIEF
W.R.O. & CHIEF ENGINEER (GENERAL)
PUBLIC WORKS DEPARTMENT,
CHEPAUK, CHENNAI 5

4 C.K. GNANASEKARAN
ASSISTANT ENGINEER, PWD, BUILDINGS
CONSTRUCTION SECTION, NAGAPATTINAM

5 M. MUTHUKRISHNAN
ASSISTANT ENGINEER, PWD,
CENTRAL POLYTECHNIC SECTION,
THARAMANI, CHENNAI 113

6 D. ELANGOVAN
ASSISTANT ENGINEER, PWD,
VAIGAI DAM SECTION,
VAIGAI DAM, THENI DISTRICT

7 G. BALASUBRAMANIAN
ASSISTANT ENGINEER, PWD,
MONITORING & QUALITY
CONTROL SECTION, SIVAGANGAI

8 M. PANDI SELVI
ASSISTANT ENGINEER, PWD,
GROUND WATER SECTION,
VIRUDHUNAGAR

9 J. AMUTHA
ASSISTANT ENGINEER, PWD,
GAUGING SECTION,
G.A. CANAL DIVISION,
THANJAVUR.

10 TAMIL NADU ENGINEERING ASSOCIATION,
PUBLIC WORKS DEPARTMENT,
CHEPAUK, CHENNAI – 5.
REP BY ITS SECRETARY
(ORGANISATION & LEGAL) D. MURUGESAN

Petition praying that in the circumstances stated therein and in the affidavit filed therewith the High Court will be pleased to stay the operation of the order passed by this Hon'ble Court in WP No. 11148/2007 dt 23/12/2014 pending WA. No. 82 of 2015.

Order : This Petition coming on for orders upon perusing the petition and the affidavit filled in support thereof and upon hearing the arguments of MR.K.V. SUBRAMANIAM SENIOR COUNSEL for M/S.MALARVIZHI UDAYAKUMAR, Advocate for the petitioner and of MR.G.V.MOHANKUMAR for MR.K. RAMASAMY Advocate for the 1st respondent and of MR.P.H.ARVIND PANDIAN ADDL.ADVOCATE GENERAL Assisted by MR.N.SAKTHIVEL GOVT.ADVOCATE for the respondents 2 & 3 and of MR.P.RAJENDRAN Advocate for the 10th respondent the court made the following order :-

Status – quo as obtained today, shall be maintained.

-sd/-
05/03/2015

/ TRUE COPY /

Sub-Assistant Registrar ( Statistics / C.S. )
High Court, Madras - 600 104.

To
1 THE SECRETARY TO GOVERNMENT
GOVERNMENT OF TAMILNADU, PUBLIC WORKS
DEPARTMENT, FORT ST GEORGE, CHENNAI 9
2 THE ENGINEER IN CHIEF
W.R.O. & CHIEF ENGINEER (GENERAL) PUBLIC
WORKS DEPARTMENT, CHEPAUK, CHENNAI 5

C.C. to M/S. MALARVIZHI UDAYAKUMAR Advocate SR.No.3175
The Government Advocate, High Court, Madras - 104.
C.C. to MR.P. RAJENDRAN Advocate on payment of necessary charges

Order
in
MP.1 / 2015
in
WA. 82 / 2015
Date : 05/03/2015

From 26.2.2001 the Registry is issuing certified copies of the Interim Orders in this format
VS 10.03.2015

## பொங்கும் நிதி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னைக் கிளையின் உறுப்பினர் பொறியாளர். E.சுரேஷ், இளம் பொறியாளர் அவர்கள் மரணமடைந்ததைத் தொடர்ந்து அவரது குடும்பத்திற்கு குடும்ப நலநிதித் தொகையாக ரூ. 50000/- காசோலை தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் பொங்கும் நிதி செயலாளர் பொறி. N. புண்ணியகோட்டி, அவர்களால் வழங்கப்பட்டது.



பெறுநர்,

மாண்புமிகு தமிழக முதல்வர்
மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர்,
பொதுப்பணித்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர்,
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர்,
சட்டத்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

தலைமைச் செயலாளர்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு பணியாளர்
தேர்வாணையம்,
சென்னை - 600 108.

மாண்புமிகு அய்யா,

**பொருள் :** பொதுப்பணித்துறை - மின்னியல் இளநிலைப் பொறியாளர் / உதவிப் பொறியாளர் பதவியிலிருந்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் - உயர்நீதிமன்ற தீர்ப்பு - உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு - ஏற்கனவே உள்ள உச்சநீதிமன்ற தீர்ப்புக்கும் மற்றும் விதிமுறைகளுக்கும் மாறான நடவடிக்கை - உயர்நீதிமன்ற தீர்ப்பை கருத்தில் கொள்ளக்கூடாது - உதவிப்பொறியாளர் முதுநிலையில் மூத்தவர்களாக (Seniors) உள்ள திரு. T.R. கணேஷ் மற்றும் திரு. S. துரை ஆகியோரை சேர்த்து பதவி உயர்வு பட்டியல் தயாரிக்க ஆணையிட வேண்டுதல் - தொடர்பாக

**பார்வை :**
1. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்கள். WP **34276**, **14865** and **24783** of 2007 நாள்.15.10.2014.
2. உச்சநீதிமன்ற வழக்கு CA எண். 7795 / 1997 நாள். 20.02.2002.
3. அரசு ஆணை எண. 66 பொ.ப.து. (பி2) நாள். 12.03.2007.

பார்வை 1-ல் கண்டுள்ள வழக்கில் பகுதி நேர பொறியியல் பட்டப் படிப்பு படித்து இளநிலைப் பொறியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர்களாக பதவிப் பெயர் மாற்றம் [Recruitment by transfer] பெற்றவர்களை உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கும் பொழுது பதவி பெயர் மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்களை இளநிலைப் பொறியாளர் முதுநிலையில் வைத்து இளநிலைப் பொறியாளர்களுக்குரிய 25% சதவிகித காலிப் பணியிடங்களில் உதவி செயற்பொறியாளா் பதவி உயர்வு அளிக்கலாம் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இது குறித்து அரசு மட்டத்தில் தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும் என அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறோம். இதற்கிடையில் மின்னியல் இளநிலைப் பொறியாளர் / உதவிப்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. அதில் பார்வை 2-ல் கண்ட உச்சநீதிமன்ற தீர்ப்பு மற்றும் பார்வை - 3 ல் உள்ள அரசாணைக்கு மாற்றாக உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி இளநிலைப் பொறியாளர் பதவியிலிருந்து பகுதிநேர பொறியியல் பட்டம் பயின்று உதவிப்பொறியாளர்களாக பதவிப்பெயர் மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்கள் திரு. T.R. கணேஷ் மற்றும் திரு. S. துரை ஆகிய இரு மூத்த பொறியாளர்களை உதவி செயற்பொறியாளர் கருத்துருவிலிருந்து நீக்கிவிட்டு அவரை விட இளையவர்களை கொண்டு **நிரந்தர உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல்** தயாரித்து இருப்பதாக தெரிய வருகிறது.

பகுதிநேர பொறியியல் பட்டப்படிப்பு படித்து உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் பெற்றவர்களை உதவிப்பொறியாளர் முதுநிலையில் வைத்து உதவிப்பொறியாளர்களுக்குரிய 75% விகிதாச்சாரத்தில் வைத்து உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்க தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி (TNES) தமிழ்நாடு பொறியியல் சார்நிலை பணித்தொகுதி (TNESS) விதிகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் பல்வேறு அரசாணைகள் மூலமாக, தெளிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையில் 40 ஆண்டுகளாக இந்த விதிகளின்படிதான் பதவி பெயர் மாற்றம் பெற்ற உதவிப்பொறியாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது.

**எல்லாவற்றுக்கும் மேலாக பார்வை 2- ல் கண்டுள்ள உச்சநீதிமன்றத் தீர்ப்பில் பகுதிநேர பொறியியல் பட்டப்படிப்பு படித்து உதவிப் பொறியாளர்களாக பதவிப் பெயர் மாற்றம் பெற்றவர்களை உதவிப் பொறியாளர் முதுநிலையில் வைத்து உதவிப்பொறியாளர்களுக்குரிய 75% விகிதாச்சாரத்தில் வைத்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பை அடிப்படையாக வைத்து அரசு ஆணை எண் 66. பொ.ப.து (பி2) நாள். 12.03.2007 வழங்கப்பட்டுள்ளது.**

**பார்வையில் கண்ட உயர்நீதிமன்ற தீர்ப்பின்மீது தமிழ்நாடு பொறியியல் சங்கம் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதால் வழக்கின் இறுதி தீர்ப்பு வரும்வரை இந்த விஷயத்தில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளுக்கும் விதிகளுக்கும் பார்வை 2-ல் கண்டுள்ள உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கும் மாறாக அரசு எந்த விதமான முடிவும் எடுக்க வேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**மேலும் திரு. T.R. கணேஷ் மற்றும் திரு S. துரை ஆகிய உதவிப் பொறியாளர்களை விதிகளின்படியும் ஏற்கனவே உள்ள உச்சநீதிமன்ற தீர்ப்பின்படியும் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் ஒன்று மற்றும் இரண்டாம் இடத்தில் வைத்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

(முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சென்னை - 5.

## மார்ச் 2015-ம் மாத பொறியாளர் இதழில் இருந்து

தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திலிருந்து உதவிப் பொறியாளராக அரசாணை எண்.1, பொதுப்பணித்துறை, நாள் 02.01.1990ன் படி பணிமாறுதலில் நியமனம் பெற்றவர்களின் நியமனத்தை எதிர்த்து நமது சங்கத்தின் மூலம் உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் (W.P. No.1148and 21344 of 2007) தீர்ப்பிற்கு எதிராக தனிநபர்களின் மூலம் சென்னை உயர்நீதிமன்ற அமர்வில் மேல்முறையீட்டு மனு (Writ Appeal Nos. 82/2015 & 95 / 2015) தாக்கல் செய்யப்பட்டு கடந்த 05.03.2015 அன்று விசாரனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மேற்படி விசாரனையில் சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதி அளித்த தீர்ப்பிற்கு தடையாணை தர மறுத்துவிட்டது என்பதனையும் இருப்பினும் தனிநபர்களுக்கு தற்பொழுது இருக்கும் நிலையே தொடரும் (Status Quo) எனவும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வழக்கில் நமக்கு நியாயமான தீர்ப்பு பெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது.

**Scrapping of G.o. Ms. No. 1. PWD dated.2.1.1990 :-**

The General Secretary/AOE informed that action is being taken to quash the G.O.Ms. No.1 PWD dated. 2.1.1990 in Hon'ble Supreme Court of India based on the Hon'ble Supreme Court of India Justice Thakur Judgement.

**Implementation of Hon'ble High Court of Madras Judgement delivered in G.O. Ms. No.66, PWD dt.12.03.2007 :-**

The General Secretary/AOE informed that our Association has represented **Hon'ble Chief Minister of Tamil Nadu** and Minister for Public Works, Principal Secretary to Government, PWD and the Engineer-in-Chief, WRO & Chief Engineer (General), PWD to implement the Hon'ble High Court of Madras Judgement delivered against **G.O. Ms. No.66** PWD dt.12.03.2007.

Resolved to request the **Hon'ble Chief Minister of Tamil Nadu** to withdraw the **G.O. Ms. No.1.** PWD, dt. 02.01.90 and **G.O. Ms. No.66,** PWD dt. 12.03.2007 which are detiremental to the Graduate Engineers of TNPWD.

**Scrapping of G.O. Ms. No.1 PWD dated. 02.01.1990 and implementation of Judgement delivered in G.O. Ms. No.66 PWD dated.12.03.2007 :-**

The General Secretary/AOE informed that every action is being taked to scrap G.O. Ms. No.1 PWD dated.02.01.1990 in the Hon'ble SupremeCourt of India. The General Secretary/AOE also informed that our Association Office bearers has met Hon'ble Chief Minister and Minister for Public Works, Principal Secretary to Govt., PWD and Engineer-in-Chief, WRO & Chief Engineer (General), PWD requesting to implement the Judgement delivered by Hon'ble High Court of Madras against G.O. Ms. No.66 PWD dt.12.03.2007.

| M.No. | Name | Designation | Date of Birth | Branch |
|---|---|---|---|---|
| 4331 | X. Basteen Veenu | Assistant Engineer | 25.05.1978 | Thirunelveli |
| 4332. | K. Pugazhenthi | Assistant Engineer | 09.06.1966 | Cuddalore |
| 4333 | M. Kubendran | Junior Engineer | 11.02.1966 | Theni |
| 4334 | K. Uma | Work Inspector Gr-II | 01.06.1974 | Salem |
| 4335 | G. Achuthanandan | Work Inspector Gr-I | 26.06.1968 | Cuddalore |
| 4336 | T. Babu | Work Inspector Gr-II | 31.05.1971 | Cuddalore |
| 4337 | S. Vetrivel | Work Inspector Gr-II | 10.05.1979 | Cuddalore |
| 4338 | M. Selvam | Work Inspector Gr-II | 16.03.1965 | Chennai |
| 4339 | G. Mangayarkkarasi | Work Inspector Gr-III | 12.04.1969 | Salem |
| 4340 | C. Manikandan | Work Inspector | 29.05.1967 | Theni |
| 4341 | M. Raja | Work Inspector | 28.05.1964 | Cuddalore |
| 4342 | V. Raman | Irrigation Assistant | 16.08.1979 | Cuddalore |
| 4343 | A. Kumar | Driver | 07.03.1970 | Cuddalore |
| 4344 | V. Mohandas | Work Inspector | 04.05.1970 | Salem |
| 4345 | K. Kanakaraj | Work Inspetctor | 15.05.1972 | Chennai |

The Members who were not allotted membership numbers, please contact your branch office bearers with your date of birth.

**Er. S. Kannan**
Secretary (Organisation & Legal)

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்
## மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியம் பல கட்ட பேச்சுவார்த்தைகளில், ஒப்பந்தங்களில் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்திட இசைவு தெரிவிக்கப்பட்ட பல கோரிக்கைகள் அமல்படுத்தப்படாமலே உள்ளதை உடனே அமல்படுத்திட வலியுறுத்தி தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க பொதுக்குழு முடிவின்படி:

**முதற்கட்டமாக:** 25.02.2015 அன்று தமிழகம் முழுவதும் மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் முன்பாக 5000 பட்டயப் பொறியாளர்கள் கலந்து கொண்ட **"நுழைவாயிற் கூட்டங்கள்"** நடைபெற்றது. அதன்பின்னரும் வாரியம் கோரிக்கைகளை அமல்படுத்தாமல் இருந்த நிலையில்

**இரண்டாம் கட்டமாக:** 17.03.2015 அன்று இதுவரை மின்சார வாரியம் சந்திக்காத அளவில் தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகம் முன்பாக தமிழகம் முழுவதிலிருந்தும் 4000 பொறியாளர்கள் கலந்து கொண்ட **"மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்"** நடைபெற்றது.

பட்டயப் பொறியாளர்களின் நியாயமான கோரிக்கைகளை அமல்படுத்திட ஆதரவு தெரிவித்து தமிழ்நாடு மின்சார வாரிய சகோதர தொழிற்சங்கங்களும், தமிழ்நாடு பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு டிப்ளமோ பேரவை, அகில இந்திய மின் பட்டயப் பொறியாளர் சம்மேளனம் சார்பிலும் ஆதரவும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் மூத்த தலைவர் பொறி.C.P. சண்முகம், அவர்கள் வீரமுழக்கமிட்டு வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொதுப்பணித்துறை சார்பில் பொறி.த. முருகேசன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். DECT சார்பில் பொறி.கே. வாசுதேவன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்றதில் **மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும், மதிப்பிற்குரிய வாரியத்தலைவர் அவர்களும்** கோரிக்கைகள் விரைந்து அமல்படுத்திட உறுதியளித்ததுடன் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். நன்றி.

பட்டயப் பொறியாளர் நலன் காத்திட தோள்கொடுத்து வலிமை சேர்த்த தமிழ்நாடு பொதுப்பணித்துறை பட்டயப் பொறியாளர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி,

தோழமையுடன்

(வி. அசோக்குமார்)
பொதுச் செயலாளர்

தமிழ்நாடு மின்சார வாரியம் பேச்சுவார்த்தையில் பலமுறை ஏற்றுக்கொண்டும், உறுதி அளித்தும் இதுவரை அமல்படுத்தாமல் தாமதப்படுத்தப்பட்டு வரும் கோரிக்கைகள்

14 ஆண்டுகள் இளநிலைப் பொறியாளர் / முதல் நிலையில் பணிமுடித்த அனைத்து (மின்னியல் / இயந்திரவியல் / பொதுவியல்) இளநிலைப் பொறியாளர்களுக்கும் (உதவிப் பொறியாளர் / பொதுவியலுக்கு வழங்கியது போன்றே எந்த மாற்றமுமின்றி) உதவி செயற் பொறியாளர் / சார்பு பதவிகள் வழங்கிட வேண்டும்.

தாமதப்படுத்தப்பட்டு வரும் இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை, இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வு, உள்முகத்தேர்வு - உதவிப் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் உடனடியாக வழங்கிட வேண்டும்.

நகர் பிரிவுகளுக்கு வழங்கியது போன்றே வாரியத்திலுள்ள அனைத்து மின்விநியோக பிரிவுகளுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் வழங்கிட வேண்டும்.

அரசுத்துறைக்கு இணையான சம்பளத்தை வாரியத் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு வழங்கிட வேண்டும்.

தொழிற்தீர்ப்பாயமும், சென்னை உயர்நீதி மன்றமும் அளித்திட்ட தீர்ப்பின்படி உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் இடையேயான பொதுப் பெயர் வழங்கிட வேண்டும்.

வாரிய மறுசீரமைப்பு - முத்தரப்பு ஒப்பந்தத்தில் ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்து ஷரத்துக்களும் இடம் பெற்று பணியாளர்களுக்கு பாதுகாப்பு அளித்திட வேண்டும்.

ஊர் மாறுதல்கள், பதவி உயர்வுகளில் வாரிய விதிமுறைகள் கடைபிடித்திட வேண்டும்.

நீர்மின் திட்ட ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டபடி அனைத்து பொதுவியல் உபகோட்டங்களுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் (பொதுவியல்) பணி அனுமதி வழங்கிட வேண்டும்.

---

**பெறுநர்,**
**முதன்மை தலைமை பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,**
**மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),**
**பொதுப்பணித்துறை,**
**சேப்பாக்கம், சென்னை - 5.**

**ஐயா,**

**பொருள்** : பொதுப்பணித்துறை - தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளநிலைப்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க கோருதல் - சம்பந்தமாக.

2012 - 13 ஆம் ஆண்டிற்கான இளநிலைப்பொறியாளர் காலிப்பணியிட மதீப்பீட்டில் (Estimate of Vacancy) ஊட்டுப்பதவியிலிருந்து இளநிலைப்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க 17 பதவிகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட 17 பணியிடங்களில் 2 பதவிகள் மட்டுமே ஊட்டுப்பதவியிலிருந்து நிரப்பப்பட்டுள்ளன. மீதம் 15 காலி பதவிகள் உள்ளன. அந்த 15 பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தால் உதவிப் பொறியாளர் / இளநிலைப்பொறியாளர்களிடையே உள்ள 3:1 என்ற பணியிட விகிதாச்சார மீறல் (Ratio imbalance) ஏற்படும்.

எனவே தகுதியுள்ள தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு இளநிலைப்பொறியாளருக்கான விகிதாச்சாரப்படி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன மேற்கண்ட 15 காலிப்பதவிகளில் இளநிலைப்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

(த.முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சென்னை - 5.

**முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, (ம) தலைமைப் பொறியாளர் (பொது)**
**பொ.ப.து, சேப்பாக்கம், சென்னை-5.**

முன்னிலை பொறி சு. திருமாறன், எம்.இ.
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம)
தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.

செயல்முறை ஆணை எண் எஸ் 1 (2)/20601/2015/நாள் 31.03.2015.

பொருள் - பணியமைப்பு - பொ.ப.து - த.நா.பொறியாளர் பணித்தொகுதி 31.03.2015 பி.ப அகவை முதிர்வின் காரணமாக அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறுதல் ஆணையிடப்படுகிறது.

பார்வை - 1 தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, திருச்சி மண்டலம், திருச்சி கடித எண் சி1/8355/2014/நாள் 12.03.2015
2. கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து, கட்டட க(ம)ப வட்டம், வேலூர் கடி எண் நி1/1602/2014/ நாள் 10.03.2015

.............

தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதியைச் சார்ந்த கீழ்க்காணும் பொதுப்பணித்துறை அலுவலர்களை அகவை முதிர்வின் காரணமாக 31.03.2015 பி.ப அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதித்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ எண். | பெயர் மற்றும் பிறந்த தேதி திருவாளர்கள் | பதவி |
|---|---|---|
| 1. | M. கணேசன் (04.03.1957) | உதவிப் பொறியாளர் |
| 2. | K. தங்கமணி (15.03.1957) | உதவிப் பொறியாளர் |

சு. திருமாறன்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,
(ம) தலைமைப் பொறியாளர், (பொது)

பெறுநர்

1. திரு. M. கணேசன், உதவிப் பொறியாளர்
(வழி) சிறப்பு தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, கீழ்காவேரி வடிநில வட்டம், தஞ்சாவூர்
2. திரு. K. தங்கமணி, உதவிப் பொறியாளர்,
(வழி), கண்காணிப்பு பொறியாளர், பொபது, கட்டட க(ம)ப வட்டம், வேலூர்

**நகல்கள்**

1. முதன்மை தலைமைப் பொறியாளர் (க), மற்றும் தலைமைப் பொறியாளர் (க), சென்னை மண்டலம், பொபது, சென்னை.
2. தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., திருச்சி மண்டலம், திருச்சி
3. சிறப்பு தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, கீழ்காவேரி வடிநில வட்டம், தஞ்சாவூர்.
4. கண்காணிப்புப் பொறியாளர், கட்டட (க(ம)ப) வட்டம், வேலூர்.
5. செயற்பொறியாளர், நீ.ஆ.து, வெண்ணாறு வடிநில கோட்டம், தஞ்சாவூர்.
6. செயற்பொறியாளர், பொ.ப.து., கட்டட க(ம)ப கோட்டம், வேலூர்.
6. மாவட்ட கருவூலம், தஞ்சாவூர், வேலூர்,
7. மாநில கணக்காயர், (A&E), சென்னை-18.
8. இ.த.பொ(பொது), ஆ.அ., க.கா எஸ்.1,2, சி.1 மற்றும் சி.2 பிரிவு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

**சுருக்கம்**

**பணியமைப்பு - தமிழ்நாடு பொறியியல் பணி - பொதுப்பணித்துறை - வயது முதிர்வின் காரணமாக 31.03.2015 பிற்பகல் அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும் "அ" மற்றும் "ஆ" பிரிவைச் சார்ந்த அலுவலர்கள் - ஆணை வெளியிடப்படுகிறது.**

**பொதுப்பணித் (எப்1) துறை அரசாணை (வாலாயம்) எண்.141 நாள்:31.03.2015 படிக்கப்பட்டது:**

1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை-5
கடித எண்.எஸ்.1(2)/20600/ 2015 நாள் 17.03.2015 மற்றும் சி2(3)/00125/2015-3 நாள் 18.03.2015.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி, சென்னை-113 கடித எண்.ஈ2(2)11198/2014 நாள் 17.3.2015

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை மற்றும் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி, சென்னை-113 ஆகியோர் அளித்துள்ள பரிந்துரையினை ஏற்று, தமிழ்நாடு பொதுப்பணித் துறையில் பணிபுரிந்துவரும் கீழ்க்காணும் "அ" மற்றும் "ஆ" பிரிவைச் சார்ந்த அலுவலர்களை, வயது முதிர்வின் காரணமாக, 31.03.2015 பிற்பகல் அன்று அரசுப்பணியிலிருந்து ஓய்வுபெற அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

| வ எண். | பெயர் மற்றும் பிறந்த தேதி திருவாளர்கள் | பதவி |
|---|---|---|
| 1. | S.P பாண்டியன் | தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை |
| 2. | S. விஜயகுமார் | கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர் |
| 3. | G. கோபால் | கண்காணிப்புப் பொறியாளர்/இணை இயக்குநர் |
| 4. | ஷீலா லிலியன் சுந்தரம் | கண்காணிப்புப் பொறியாளர் (மின்) |
| 5. | M. தமிழரசன் | இணை இயக்குநர் (நிலவியல்) |
| 6. | S. வீராச்சாமி | துணை இயக்குநர் (நிலவியல்) |
| 7. | T. செல்வராஜீ | உதவி செயற் பொறியாளர் |
| 8. | T. அன்பு இளங்கோ | உதவி செயற் பொறியாளர் |
| 9. | K. தியாகராஜன் | உதவி செயற் பொறியாளர் |
| 10.<br>11. | M.கேசவன்<br>K. இரத்தினசாமி | உதவி செயற் பொறியாளர்<br>உதவி செயற் பொறியாளர் |
| 12. | S. முருகேசன் | உதவி செயற் பொறியாளர் |
| 13. | T.T. உதயகுமார் | உதவி செயற் பொறியாளர் (மின்) |
| 14. | R. நாகமணி | தலைமை வரைதொழில் அலுவலர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

நா.ச. பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-5.
சம்பந்தப்பட்ட அலுவலர்கள் **(வழி)** முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-5
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், தரமணி, சென்னை-113
தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், நீர் ஆய்வு நிறுவனம், தரமணி, சென்னை-600 113.
கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநா , பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சி
முதன்மை மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை-18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு)/(தெற்கு) சென்னை-8/35.
பொதுப்பணித்(ஏ/ஈ) துறை, சென்னை-9.
இ.கோ/உதிரி

-/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/-

## 17.03.2015 அன்று தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் காட்சிகள்





## 17.03.2015 அன்று தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் காட்சிகள்






Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & TN/PMG (CCR) WPP No.308/2015-17
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**April 2015**

## கோயம்புத்தூர் தமிழ்நாடு பொறியியல் சங்க இல்ல முதல் மாடி கட்டிடம் திறப்புவிழா மற்றும் மையச் செயற்குழு கூட்டம்

**நாள்:** 09.05.2015 சனிக்கிழமை
**இடம்:** பொறியாளர் சு. பழனிச்சாமி இல்லம், கோயம்புத்தூர்.

பொறியாளர் சகோதர, சகோதரிகளும், சிறப்பு அழைப்பாளர்களும் தவறாது கலந்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

**பொறியாளர். எஸ். கண்ணன்**
**செயலாளர் அமைப்பு மற்றும் சட்டம்**

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Published on 03-04-2015**
**Postng on 06-04-2015**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PUBLISHED BY: Er. S. KANNAN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. K.P.THIYAGARAJAN AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5. PHONE: 2854 8223.